நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

மானிய விலையில் காய்கறி விதைகள்: விவசாயிகளுக்கு அழைப்பு

First Published : 29 Jul 2012 11:44:03 AM IST

உதகை, ஜூலை 28: மானிய விலையில் இடுபொருள்களைப் பெற்று பயனடையுமாறு நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை அழைப்பு விடுத்துள்ளது.

÷இது குறித்து உதகை தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் க. மோகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

÷நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறை மூலமாக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1982-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ், நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கும், நீர்ப்பிடிப்பு அல்லாத இதர பகுதிகளுக்கும் வேளாண் இடுபொருள்கள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், உயர் ரக காய்கறி விதைகள், உழுவை இயந்திரம் மற்றும் டிராக்டர்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

÷இவ்வாண்டு சிறு, குறு விவசாயிகளுக்கு பீன்ஸ், பட்டாணி, கேரட், முட்டைக்கோஸ் போன்ற உயர் விளைச்சல் ரக காய்கறி விதைகள், மற்றும் வீரிய ரக காய்கறி விதைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன. இதர விதைகள் 25 சதவீத மானியத்துடன் வழங்கப்படுகின்றன.

÷ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.1500 மதிப்பில் காய்கறி விதைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிய விலையில் விதைகளைப் பெற விரும்பும் விவசாயிகள் தங்களுக்கு விவசாய நிலம் இருப்பதற்கான சான்று மற்றும் குடும்ப அட்டை நகலுடன் சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி அலுவலர் அல்லது தோட்டக்கலை அலுவலரை அணுகி பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

÷இவ்வாண்டு வேளாண் இடுபொருள்கள் வழங்க ஒவ்வொரு கிராமத்திலும் 20 பேர் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேளாண் விரிவாக்க மையத்தில் இடுபொருள்கள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த அரிய வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு பயன்பெறுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

÷மேலும் விவரங்களுக்கு, சம்பந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர்களையோ, அல்லது வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களையோ அணுகலாம்.

முந்திரி, பலா விவசாயிகளுக்கு மறுவாழ்வுத் திட்டம்

First Published : 29 Jul 2012 11:05:48 AM IST

கடலூர், ஜூலை 28: புயல் பாதித்த கடலூர் மாவட்ட முந்திரி மற்றும் பலா விவசாயிகளுக்கு சென்னை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் டாக்டர் சந்தோஷ்பாபு மறுவாழ்வு திட்டம் குறித்து ஆலோசனை வழங்கினார்.

÷புயல் பாதித்த கடலூர் மாவட்ட முந்திரி, பலா விவசாயிகளுக்கான மறுவாழ்வு திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம், கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்ற கூடத்தில் சனிக்கிழமை நடந்தது. இதில் கலந்துகொண்ட சென்னை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் டாக்டர் சந்தோஷ்பாபு பேசியது:

புயலால் சேதம் அடைந்த முந்திரி மரங்களை வெட்டி அகற்றி புது ரக வீரிய முந்திரி கன்றுகளை நடவு செய்ய முன்வர வேண்டும். முதல் கட்டமாக 25 லட்சம் கன்றுகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, செயல் திட்டத்தின்படி இலவசமாக வழங்கப்படும்.

÷விவசாயிகள் வருவாய்க்காக இடைப்பட்ட காலத்தில் ஊடுபயிர் செய்ய உளுந்து, காய்கறி விதைகள் இலவசமாக வழங்கப்படும். முழுமையாக மரங்களை அகற்றாமல் பகுதி அளவில் மரங்களை அகற்றியவர்களுக்கு பரப்பளவுக்கு ஏற்றப்படி தொகை வழங்கப்படும்.

÷கடலூர் மாவட்டத்தில் 700 ஹெக்டேர் பரப்பளவில் 100 சதவீதம் புயல் பாதித்த மரங்கள் வெட்டி அகற்றப்பட்டுள்ளது. இந்நிலத்தில் விவசாயிகளுக்கு அடர் நடவு செய்ய வீரிய ஒட்டுச் செடிகள், சமுதாய ஆழ்குழாய் கிணறுகள், சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படும்.

÷தோட்டக்கலைத் துறையினர் ஆகஸ்ட் முதல் வாரத்தில் முந்திரி கன்றுகள் விநியோகம் செய்ய செயல்திட்டம் வகுத்து (விவசாயிகள் வாரியாக), கன்றுகள் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மாதம் ஒரு முறை நேரில் ஆய்வு செய்யப்படும் என சந்தோஷ்பாபு கூறினார்.

÷ராஜேந்திர ரத்னூ (ஆட்சியர்): புயல் பாதித்த விவசாயிகளிடம் பல்வேறு ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும், அவை ஒவ்வொன்றாக அமல்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

÷விவசாயிகள்: கூட்டத்தில் கருத்து தெரிவித்த முந்திரி, பலா விவசாயிகள், நீர் ஆதாரத்தை பெருக்கும் திட்டங்களுக்கு உறுதி அளித்தால் (ஆழ்குழாய் கிணறு, சொட்டு நீர் பாசனம்) புயல் பாதித்த மரங்களை வெட்டி அகற்ற தயாராக உள்ளதாக கருத்து தெரிவித்தனர்.

÷கூட்டத்தில் சார் ஆட்சியர் ஜெயச்சந்திரபாலுரெட்டி, தோட்டக்கலை துணை இயக்குநர் பா.இராஜேந்திரன், ஆட்சியர் நேர்முக உதவியாளர் (விவசாயம்), தோட்டக்கலை உதவி இயக்குநர், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

"ஆய்வின் பயனால் நெல் கதிர் ஓர் அங்குலமாவது உயர வேண்டும்'

- பா. கிருஷ்ணன் -

First Published : 29 Jul 2012 11:12:44 AM IST

இந்திய, குறிப்பாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் படையெடுப்பு உலக அரங்கில் குறிப்பிடத் தக்க நிகழ்வுகளை காலம் காலமாக ஏற்படுத்தி வருகிறது.

நோபல் பரிசு பெற்ற சர் சி.வி. ராமன், சுப்பிரமணியம் சந்திரசேகர் முதல் வெங்கடராமன் ராமகிருஷ்ணன் வரையிலாகட்டும், அப்துல் கலாம், எம்.எஸ். சுவாமிநாதன், சிவதாணுப் பிள்ளை போன்றவர்களாகட்டும் ஒவ்வொருவரும் தங்களது துறையில் தனி முத்திரையைப் பதித்துவிடுவதுடன் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர்.

அதைப் போல், அறிவியல் ஆய்வையே தனது மூச்சு, பேச்சு, லட்சியமாகக் கொண்டு அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் (எய்ம்ஸ்) தடம் பதித்து வருபவர் தமிழகத்தை வேராகக் கொண்ட பேராசிரியர் என்.ஆர். ஜெகந்நாதன்.

ர்வதேச அளவில் மிகவும் கெப்ரவம் மிக்க அமைப்பான "உயிர் இயற்பியல்' விஞ்ஞானத்துக்கான "இன்டர்நேஷனல் யூனியன் ஃபார் ப்யூர் அண்ட் அப்ளைடு பயோ-ஃபிசிக்ஸ்' (ஐயூபாப்) என்ற அமைப்பின் அமைப்பின் பொதுக் குழுவில் உறுப்பினராக இடம்பெற்றுள்ள முதல் இந்தியர் என்ற பெருமை பெற்றுள்ளார் இவர்.

தேசத்தின் மீது ஆழ்ந்த பற்று, ஆய்வில் நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள், தனது லட்சியம் என பல்வேறு விஷயங்களை இவர் பகிர்ந்து கொள்கிறார்.

தினமணி: உங்களது கல்வி, பின்னணி குறித்து...?

பேராசிரியர் ஜெகந்நாதன்: வட ஆர்க்காட்டைச் சேர்ந்த சாதாரண குடும்பத்தில் பிறந்தேன். நான் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி. இயற்பியல் படித்த பிறகு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் உயிர் இயற்பியல் (பயோ-ஃபிசிக்ஸ்) துறையில் 1982-ல் ஆய்வு முடித்தேன். அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றிய பிறகு, எய்ம்ஸ் மருத்துவ நிறுவனத்தில் "காந்தவியல் ஒலி அலை அதிர்வுப் படிம' (மேக்னடிக் ரெசொனன்ஸ் இமேஜிங்) துறையின் தலைவராகப் பணியாற்றி வருகிறேன்.

தினமணி: சர்வதேச அளவில் தங்களுக்குக் கிடைத்த கெப்ரவம் பற்றி...

பேராசிரியர் ஜெகந்நாதன்: உலகின் 72 நாடுகள் அங்கம் வகிக்கும் "இன்டர்நேஷனல் யூனியன் ஃபார் ப்யூர் அண்ட் அப்ளைடு பயோ-ஃபிசிக்ஸ்' அமைப்பு பயோ ஃபிசிக்ஸ் துறையில் மிக உயர்ந்த அமைப்பாகும். இதற்கு முன் ஆசிய பயோ-ஃபிசிக்ஸ் அசோசியேஷன் அமைப்பின் தலைவராக இருந்திருக்கிறேன்.

பயோ ஃபிசிக்ஸ் துறையில் எனது பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற தேர்தலில் அந்த அமைப்பின் கவுன்சில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் என்ற பெருமை கிடைத்துள்ளது.

இதன் மூலம் இந்தியாவில் மேற்கொள்ளப்படும் பயோ ஃபிசிக்ஸ் துறை ஆய்வுக்கு உலக அளவில் கெப்ரவம் கிடைக்கும். மூன்றாண்டுக்கு ஒரு முறை சர்வதேச அளவில் இந்த அமைப்பின் மாநாடு (காங்கிரஸ்) நடத்தப்படும். அத்துடன், ஒன்றரை ஆண்டுக்கு ஒரு முறை குழுக் கூட்டம் பல்வேறு அறிவியல் தகவல்களை விவாதிக்கும்.

இந்த அமைப்பின் மூலம் அத்துறையில் ஆய்வும் கல்வித் திட்டமும் எந்த திசையில் செல்ல வேண்டும் என்பது உலக அளவில் முடிவு செய்யப்படும். வழிகாட்டு நெறிகளும் உருவாக்கப்படும்.

தினமணி: தற்போது தாங்கள் மேற்கொள்ளும் கல்வி, ஆய்வுப் பணிகள் என்னென்ன..?

பேராசிரியர் ஜெகந்நாதன்: இந்திய பயோ ஃபிசிக்ஸ் சொசைட்டியின் தலைவராக இருந்தபோது, இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பயோ ஃபிசிக்ஸ் துறையின் பாடத் திட்டம் எப்படி அமைய வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டது. 2010-ம் ஆண்டில் "இன்டர்நேஷனல் சொசைட்டி ஃபார் மேக்னடிக் ரெசொனன்ஸ்' நடத்திய மாநாட்டில் ஃபெலோஷிப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தெற்காசிய நாடுகளிலேயே இந்தியர் ஒருவருக்குத்தான் அந்த வாய்ப்பு கிடைத்தது.

அதையடுத்து இணையதளத்தின் அடிப்படையில் மேக்னடிக் ரெசொனன்ஸ் இமேஜிங் குறித்த பாடத் திட்டங்களை வடிவமைத்தேன்.

இப்போது எனது காந்தவியல் அதிர்வலை படிமம் தொடர்பான ஆய்வின் தொடர்ச்சியாக பிராஸ்டேட் கேன்சர், மார்பகப் புற்றுநோய்க்கான காரணங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

தினமணி: ஆய்வில் தாங்கள் அதிகம் நாட்டம் கொண்டிருப்பது ஏன்?

பேராசிரியர் ஜெகந்நாதன்: இந்தியாவில் அறிவியல் துறையில் ஏராளமான ஆய்வுகள் நீண்ட காலமாகவே நடத்தப்படுகின்றன. ஆனால், அவை யாவும் கல்வி சார்ந்த ஆய்வாகவே (அகடமிக் ரிசர்ச்) அமைந்துவிடுகின்றன.

அது அறிவு மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், என்னைப் பொருத்த வரையில் ஆய்வுகள் மனித சமுதாயத்துக்குப் பெரிதும் பயன்பட வேண்டும்.

பொதுவாக ஆய்வுகளைப் பற்றி நான் குறிப்பிடுவது இதைத்தான்: ""ஆய்வுகள் நடத்தி, நெல் கதிர் ஓர் அங்குலம் கூட வளராவிட்டால் என்ன பயன்'' என்று கூறுவேன்.

எனவே, மக்களுக்கும் சமுதாயத்துக்கும் ஆய்வுகள் பயன்பட வேண்டும் என்பதே என் லட்சியம். இதன் அடிப்படையில்தான் அறிவியல் ஆய்வகங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் அனைத்தையும் மருத்துவப் பயன்பாட்டை நோக்கியதாகவே அமைத்து வருகிறேன். எனது மாணவர்களிடமும் இதையே அறிவுறுத்தி வருகிறேன்.

தினமணி: ஆய்வுலகைப் பொருத்தவரை அடுத்த முக்கிய நிகழ்வு என்ன?

பேராசிரியர் ஜெகந்நாதன்: இந்திய அறிவியல் காங்கிரஸ் அமைப்பில் பிரிவுத் தலைவராக (செக்ஷனல் பிரெசிடென்ட்) என்ற பொறுப்பில் இருக்கிறேன். அதன் மாநாடு கொல்கத்தாவில் அடுத்த ஆண்டு ஜனவரி 3-ம் தேதி முதல் 7-ம் தேதி வரையில் நடைபெறுகிறது.

இந்த அமைப்பின் தலைவராக பிரதமர் மன்மோகன் சிங் வரும் ஜனவரி 4-ம் தேதி முறைப்படி பொறுப்பேற்கிறார்.

பொதுவாக அறிவியல் உலகைச் சேர்ந்த இந்தப் பொறுப்பில் முதல் முறையாகப் பொருளாதார மேதை ஒருவர் பொறுப்பேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**பனங்கருப்பட்டி கிலோ ரூ.90 க்கு விற்பனை**

ஜுலை 30,2012,05:23



ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில் பனங்கருப்பட்டி உற்பத்தி காலம் முடிந்ததால், தேக்கமடைந்த பனங்கருப்பட்டியை ஒரு கிலோ, 90 ரூபாய்க்கு வியாபாரிகள் விற்பனை செய்துவருகின்றனர்.பதனீர்:மாநிலம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான தென்னை, பனை விவசாயிகள், பனை மரத்தில் பாளையை சீவி, அதில் வடியும் பதநீரில், சுண்ணாம்பு கலந்து, பதனீராக விற்பனை செய்கின்றனர். உடலுக்கு குளிர்ச்சியைத் தருவதாலும், ஊட்டச்சத்து அதிகம் இருப்பதாலும், பதனீரை மக்கள் அதிகம் விரும்புவர். உடலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில், பதனீரை பாட்டிலில் அடைத்து, காதி வாரியம் விற்பனை செய்கிறது.

பனை, தென்னை :பதனீரின் மூலம் கருப்பட்டி தயாரிக்கப்பட்டு, வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ஈரோடு மாவட்டம் பெருந்துறை, கோபி, டி.என்.பாளையம்

வட்டாரம், திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் வட்டாரத்தில் பனை, தென்னை கருப்பட்டி அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.உற்பத்தி:ஏப்ரல் மாதத்தில் துவங்கி, ஜுலை மாதம் வரை பனங்கருப்பட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. அம்மாதங்களில், குன்னத்தூரில் இருந்து பல்வேறு மாவட்டங்களுக்கு, பனங்கருப்பட்டி அனுப்பப்படுகிறது. தற்போது, பனங்கருப்பட்டி பருவம் நிறைவடைந்ததால், பனங்கருப்பட்டி விற்பனை செய்யப்படுவதில்லை.

எனினும், குன்னத்தூர் பகுதியில் விவசாயிகள் வீடுகளில், இருப்பு வைத்திருந்த பனங்கருப்பட்டியை கிலோ, 90 ரூபாய்க்கு விற்கின்றனர். இன்னும் சில விவசாயிகள், ஈரோடு - திருப்பூர் சாலையோரம், கடை அமைத்து விற்பனை செய்கின்றனர். பனங்கருப்பட்டியில் மருத்துவ குணம் அதிகமாக இருப்பதால், அதிகளவில் மக்கள் வாங்கிச் செல்கின்றனர்.

பனங்கருப்பட்டி உற்பத்தியாளர்கள் கூறியதாவது:இப்பகுதியில் உற்பத்தியாகும் கருப்பட்டி, குன்னத்தூர் கருப்பட்டி உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் சங்கம் மூலம் விற்பனையாகிறது.மருத்துவ குணம்:ஜனவரி முதல் ஜுலை வரை, பனங்கருப்பட்டியும், ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை, தென்னங் கருப்பட்டியும் உற்பத்தி செய்யப்படுகிறது.தற்போது, பனங்கருப்பட்டி உற்பத்தி நிறைவடைந்து விட்டது. தென்னையை விட, பனங்கருப்பட்டியில் அதிக மருத்துவ குணம் இருப்பதால், அதற்கு என்றுமே மக்கள் மத்தியில் மவுசு உண்டு. இவ்வாறு அவர்கள்தெரிவித்தனர்.

## கறிக்கோழி தீவனம் விலை அதிகரிப்பு

ஜுலை 30,2012,05:21



பல்லடம்:கறிக்கோழி தீவனம் விலை, ஒரே மாதத்தில் கிலோவுக்கு, 10 ரூபாய் உயர்ந்துள்ளதால் கறிக்கோழி உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.பல்லடம், உடுமலை, பொங்கலூர் பகுதியில், 10 ஆயிரம் கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. வாரத்துக்கு 50 லட்Œம் கறிக்கோழிகள் உற்பத்தி செய்து, கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

மக்காச்சோளம்:கறிக்கோழிகளுக்கு மக்காச்சோளம், சில்வர்மத்தி, சோயா புண்ணாக்கு , தவிடு கொண்டு தயாரிக்கப்படும் தீவனம், உணவாக வழங்கப்படுகிறது.கடந்த மாதம், ஒரு கிலோ கறிக்கோழி தீவனம் விலை, 20 ரூபாயாக இருந்தது. தற்போது, கிலோ, 30 ரூபாயாக உயர்ந்துள்ளது. மூலப்பொருட்களான மக்காச்சோளம் குவிண்டால், 1,200 ரூபாயில் இருந்து 1,500 ரூபாயாக ஆக உயர்ந்துள்ளது.சில்வர் மத்தி கருவாடு குவிண்டால், 2,000 ரூபாயில் இருந்து 4,000 ஆயிரம் ரூபாயாகவும், ஒரு டன் சோயா புண்ணாக்கு, 20 ஆயிரத்தில் இருந்து, 50 ஆயிரம் ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

ஒரு கறிக்கோழி குஞ்சு, இரண்டு கிலோ எடையுள்ள கறிக்கோழியாக வளர்வதற்கு, மூன்றரை கிலோ தீவனம் தேவை. ஒரு மாதத்துக்கு முன், 70 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கறிக்கோழியின் விலை, தற்போது 55 ரூபாயாக குறைந்துள்ளது.தற்போது ஒரு கிலோ கறிக்கோழி உற்பத்திச் செலவு, 60 ரூபாயாக உள்ள நிலையில், இதன் விலை 55 ரூபாயாக உள்ளதால், உற்பத்தி செலவு கூட கிடைக்காத நிலை உள்ளது.

இழப்பு:"கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழுவின் ' செயலர் சுவாதி கண்ணன் கூறியதாவது:இந்தியாவில் இருந்து சோயாபுண்ணாக்கு சீனா, பாகிஸ்தான், ஈராக், ஈரான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தீவனம் தயாரிப்பிற்கான மூலப்பொருட்கள் விலை அதிகரிப்பால், ஒரே மாதத்தில், கோழித் தீவனத்தின் விலை கிலோவுக்கு, 10 ரூபாய் உயர்ந்துள்ளது. இதனால், ஒரு கிலோ கறிக்கோழி உற்பத்திக்கு எட்டு ரூபாய் வரை இழப்பு ஏற்படுகிறது. இந்நிலையை போக்க, சோயாபுண்ணாக்கு ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**வாழைப்பழம் விலை விர்...**

ஜூலை 30,2012,05:18



தர்மபுரி:தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், வாழை சாகுபடி சிறப்பாக நடந்து வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில், நெய் பூவன், கற்பூரவள்ளி, செவ்வாழை, க்ராண்டு நையன், பச்சை வாழை, ரஸ்தாளி, ஏலக்கி, மோரீஸ் உள்ளிட்ட வாழை ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். மேட்டுப்பாங்கன மலை பரப்பு நிலங்களில் ஏலக்கி சாகுபடி செய்யப்படுகிறது.மாவட்டத்தில் பருவமழை பொய்த்து வரும் நிலையில், இறவை பாசன பகுதியிலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது. இதனால், வாழை உற்பத்தி, 40 சதவீதம் வரை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இதன் விலை உயர்ந்துள்ளது.சில்லறை விலையில் கற்பூரவல்லி, பூவன் பழம் ஒன்று, 2 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இது, தற்போது, 2.50 முதல், 3 ரூபாய் வரை விற்பனையாகிறது. 3 ரூபாய்க்கு விற்பனையான பச்சை பழம், 4-5 ரூபாய்க்கும்,5 ரூபாய்க்கு விற்பனையான செவ்வாழை, 7 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது.வாழைப்பழம் விலை உயர்வால், நடுத்தர மற்றும் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சந்தைக்கு தொடர்ந்து தட்டுபாடாக வாழை வரத்து இருப்பதால், விலை குறைய வாய்ப்பு இல்லை என, வியாபாரிகள் கூறினர்.

### வரத்து குறைந்ததால் கருவாடு விலை உயர்வு

ஜூலை 30,2012,05:17



தூத்துக்குடி:ஒவ்வொரு ஆண்டும் கோடை காலங்களில் கடலோரப் பகுதிகளில், கருவாடு உற்பத்தி தீவிரமாக நடந்து வருகிறது. மே மாதம் துவங்கி, ஜூலை வரை தான் கருவாடு வரத்து இருக்கும்.மீனவர்கள் பிடிக்கும் மீன்களை தரம்வாரியாக பிரித்து, 40 சதவீதம் வரை கருவாடு உற்பத்திக்காக தேக்கி வைக்கின்றனர். மீதமுள்ள மீன்களை மாநிலம் முழுவதும் உள்ள மீன் சந்தைகளுக்கு அனுப்புகின்றனர்.

சுட்டெரிக்கும் கோடை வெயிலில், மீன்களுக்கு உள்ளே உப்பு வைத்து, கடற்கரையோரம் கொட்டி, காய வைக்கின்றனர். இரண்டு வாரங்களில் கருவாடு தயாராகின்றன. மே மாத

துவக்கத்தில், கருவாடு வரத்து கணிசமாக இருந்ததால், இதன் விலையும் சற்று மந்தமாகவேஇருந்தது.ஆடி மாதம், கடலில் காற்று பலமாக வீசுவதாலும், மீனவர்கள் மீன் பிடிக்க செல்லாததாலும், கருவாடு உற்பத்தி வெகுவாக பாதித்துள்ளது. சந்தைக்கும் கருவாடு வரத்து கணிசமாக குறைந்து விட்டது. இந்த நிலையிலும், கருவாடு பிரியர்கள், இவற்றை அதிகமாக வாங்கிச் செல்கின்றனர்.

இதனால், கருவாடு விலை கிலோவுக்கு, 50 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. அடுத்த பத்து நாட்களில், கருவாடு வரத்து குறையும் என்பதால், இதன் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என, கருவாடு வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கருவாடு வியாபாரி சம்பத் கூறியதாவது:தூத்துக்குடி, மங்களூர், நாகை, கடலூர் உள்ளிட்ட கடலோரப் மாவட்டங்களில் அதிகளவில் கருவாடு உற்பத்தி செய்யப்படுகிறது. நெத்திலி, கொள்ளி, ராட்டு, சென்னா குச்சி, நெய்மீன், பால்சுறா, வாளை உள்ளிட்ட வகையான கருவாடுகள் அதிகம் விற்பனையாகும்.

இவற்றில், அதிக சுவை கொண்ட கொள்ளி கருவாடு, பரங்கிப்பேட்டை, தரங்கம்பாடி, பெருமாபேட்டை, நாகூர் பகுதிகளில் இருந்து வருகிறது. தற்போது, கருவாடு வரத்து குறைவாக இருப்பதால், இதன் விலை உயர்ந்துவருகிறது. இதுவரை, கருவாடு கிலோவுக்கு, 50 ரூபாயும், மூட்டைக்கு, 500 ரூபாயும் உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## மஞ்சள் சாகுபடி குறைவு: விலை அதிகரிக்க வாய்ப்பு!

ஜூலை 29,2012,13:50



ஈரோடு: போதிய மழையின்றி, ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் நடவு குறைந்துள்ளது. கடந்தாண்டு விளைச்சல் அதிகமிருந்தும் விலை குறைந்ததால், இந்தாண்டு விலை அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

மஞ்சள் உணவு பொருளாகவும், அழகு சாதனம், கிருமி நாசினியாகவும் பயன்பட்டு வருகிறது. தமிழக அளவில் மஞ்சள் சாகுபடியில் ஈரோடு மாவட்டம் முதன்மை பெற்றுள்ளது. கடந்த, 2010ல் மஞ்சள் குவிண்டால், 17 ஆயிரம் ரூபாய் வரை விற்றது. தங்கத்தை விட மஞ்சளுக்கு மவுசு அதிகம் இருந்ததால், எட்டு மாத பயிரான மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஈரோடு மாவட்டத்தில், 2010ல், 11 ஆயிரத்து, 300 ஹெக்டேர் பரப்பளவுக்கு மஞ்சள் சாகுபடி நடந்தது. 2011ல் மேட்டூர் அணை முன்னதாக திறப்பு, காலிங்கராயன் வாய்க்கால் திறப்பு என நீர்ஆதார வசதி அதிகமிருந்ததால்,, 12 ஆயிரத்து, 600 ஹெக்டேர் அளவுக்கு மஞ்சள் சாகுபடி நடந்தது. ஆனால், விவசாயிகள் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை.

மஞ்சள் அதிகளவு உற்பத்தி, இருப்பு வைத்த மஞ்சள் விற்பனைக்கு குவிந்ததால், மஞ்சள் விலை குறைந்தது. குவிண்டால், 3,500 ரூபாய் என்ற அளவில் விற்றதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர். மேட்டூர் அணை, பவானிசாகர் அணை உள்பட நீராதார பகுதிகளில் போதிய நீர் இருப்பும் இல்லை. மழையும் பெய்யாததால், மஞ்சள் சாகுபடி பரப்பு மிகவும் குறைந்துள்ளது. வெளிமாநிலங்களில் மஞ்சள் சாகுபடி பரப்பு அதிகரித்ததும், விற்பனைக்காக அந்த மஞ்சள் ஈரோடு வந்ததும் விலை குறைவுக்கு காரணமாகும். தற்போது வெளிமாநிலங்களிலும் மஞ்சள் சாகுபடி குறைந்ததால், அடுத்தாண்டு மஞ்சள் விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: காலிங்கராயன் வாய்க்கால் பாசன பகுதிகளான ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடியில் அதிகம் மஞ்சள் சாகுபடியாகிறது. ஜூன், ஜூலையில் தான் பயிரிடப்படும். ஜூன் வரை, 500 ஹெக்டேர் அளவுக்கு தான் பயிரிடப்பட்டுள்ளது. இந்தாண்டு, 6,000 முதல், 7,000 ஹெக்டேர் வரை பயிரிட்டாலே அதிகம்.

விவசாயிகள் தொடர்ந்து மஞ்சளையே சாகுபடி செய்யாமல் மாற்றி மாற்றி பயிரிட வேண்டும். தேவையான காம்ப்ளக்ஸ், யூரியா, சூப்பர் பொட்டாஷ் போன்ற உரங்கள் இருப்பு உள்ளன.

கடந்தாண்டு புதிதாக மஞ்சள் சாகுபடி செய்ய விரும்புவோருக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் மஞ்சள் சாகுபடி பரப்பு அதிகரிப்பு திட்டத்தில் ஹெக்டேருக்கு, 11 ஆயிரத்து, 250 ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.
இந்தாண்டு இச்சலுகை இல்லை. சொட்டுநீர் பாசனத்துக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. அதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் கூறினார்.

## ரத்த அழுத்தம், இருதய கோளாறு உள்ளோருக்கு தனி உப்பு உற்பத்தி: அரசு நிறுவனம் திட்டம்

ஜூலை 29,2012,12:57




ராமநாதபுரம்:அடுத்தாண்டு முதல் உப்பு உற்பத்தியை, 4 லட்சம் டன் ஆக உயர்த்தவும், மற்றும் ரத்த அழுத்தம், இருதய கோளாறு உள்ளவர்களுக்காக, தனி உப்பு உற்பத்தி செய்யவும் அரசு உப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி அருகே வாலிநோக்கத்தில் அரசு உப்பு நிறுவனம், 5,500 ஏக்கரில் செயல்பட்டு வருகிறது. தற்போது 3,500 ஏக்கரில் ஆண்டுக்கு 1.60 லட்சம் டன் வரை, உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

உற்பத்தி அதிகரிக்க திட்டம்: உப்பு உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, மீதமுள்ள நிலத்தை மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது.

நடப்பாண்டு 2 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவன திட்ட மேலாளர் (பொறுப்பு) பி.செல்வராஜ் கூறியதாவது: உற்பத்தியை பெருக்கும் வகையில் 12 கோடி ரூபாயில் 4 லட்சம் டன் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பல்வேறு திட்ட பணிகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறோம்.

மேலும், மருத்துவ குணமுள்ள சோடியம் குளோரைடு கலந்த உப்பும், ரத்த அழுத்தம், இருதய கோளாறு உள்ளவர்களுக்கும் விரைவில் உப்பு தயாரிக்க திட்டமிட்டுள்ளோம், என்றார்.

## அரிசி, பருப்பு, எண்ணெய் விலை அதிகரிப்பால்...ஓட்டல்களில் உணவு பண்டங்கள் விலை உயர்கிறது

ஜூலை 29,2012,05:03



தமிழகத்தில் அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறிகள் விலை உயர்வு காரண மாக, ஆகஸ்ட் 1 முதல் ஓட்டல்களில் சாப்பாடு, சிற்றுண்டி வகைகளின் விலையை உயர்த்த ஓட்டல் உரிமையாளர்கள் முடிவு செய்துள்ளனர்.அரிசி விலை கடந்த மாதத்தை விட, நான்கு ரூபாய் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வில் இட்லி அரிசியும் தப்பவில்லை. துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாசிப்பருப்பு ஆகியவற்றின் விலை, கடந்த மாதத்தை விட, கிலோவுக்கு, 12 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

கடலை மாவு:கடலை பருப்பு, கடலை மாவு, கொண்டக்கடலை ஆகியவற்றின் விலை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. ஓட்டல் தொழிலில் முக்கிய பங்கு வகிக்கும் மைதா விலை, கிலோவுக்கு, 5 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.வேர்க்கடலை, பொட்டு கடலை, மிளகு, கடுகு, சீரகம், சோம்பு மட்டுமின்றி வெல்லம், சர்க்கரை ஆகியவற்றின் விலையும் உயர்ந்துள்ளது. ஆடிமாதம் என்பதால், காய்கறிகள் விலை கட்டுக்குள் இருந்தாலும், ஆவணியில் உயரும், என எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பள உயர்வு:உணவு பண்டங்கள் தயாரிக்கும் சமையல்காரர்களின் சம்பள உயர்வு, தொழிலாளர்கள் பற்றாக்குறை ஆகியவற்றால், ஓட்டல் உரிமையாளர்கள், சாப்பாடு மற்றும் சிற்றுண்டி வகையறாக்களின் விலையை உயர்த்த உள்ளனர். கடந்த மாதம் ஓட்டல்களில் சாப்பாடு விலை உயர்த்தப்பட்ட நிலையில், மீண்டும் விலையை உயர்த்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆகஸ்ட் 1 முதல் விலை உயர உள்ள உணவுப் பொருட்களின் விவரம்:

சேலத்தில், 40 ரூபாய்க்கு விற்கும் அளவு சாப்பாடு, 45 ரூபாயாகவும், ஸ்பெஷல் சாப்பாடு, 45 ரூபாயில் இருந்து, 50 ரூபாயாகவும் உயர்கிறது. சில ஓட்டல்:களில் அளவு சாப்பாடு, 55 ரூபாயாகவும், ஸ்பெஷல் சாப்பாடு, 70 ரூபாயாகவும், பார்சல் சாப்பாடு, 85 ரூபாயாகவும் உயர்த்தப்படவுள்ளது.

பொங்கல்எலுமிச்சை, புளியோதரை, தக்காளி, தயிர், வெஜிடபிள்பிரியாணி ஆகியவற்றின்

விலையை, 22 ரூபாயிலிருந்து, 25 ரூபாயாக உயர்த்தப்படவுள்ளது.சிற்றுண்டி வகைகளில் இரண்டு இட்லி, 15 லிருந்து, 17 ரூபாயாகவும், சாதா தோசை, 20 லிருந்து, 25 ரூபாயாகவும், வடை, 10 ரூபாயில் இருந்து, 12 ரூபாயாகவும், பொங்கல், 25 லிருந்து, 30 ரூபாயாகவும், ஊத்தப்பம், 25 ரூபாயில் இருந்து, 28 ரூபாயாகவும், மூன்று பூரி, 24 ரூபாயில் இருந்து, 27 ரூபாயாகவும், சப்பாத்தி, 25 ரூபாயில் இருந்து, 30 ரூபாயாகவும், பரோட்டா, 25 ரூபாயில் இருந்து, 30 ரூபாயாகவும், சில்லி பரோட்டா, 32 ரூபாயில் இருந்து, 35 ரூபாயாகவும் உயர்கிறது.
கூடுதல் விலை:நடுத்தர ஓட்டல் ஒன்றில் எடுக்கப்பட்டுள்ள, இந்த விலை விவரத்தை விட, நகரின் முக்கிய இடங்களில் செயல்படும் ஓட்டல்களில், சிற்றுண்டி வகைகளும், 2 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை கூடுதல் விலை வைத்து விற்பனை செய்யப்படுகிறது.இது குறித்து ஓட்டல் உரிமையாளர் ஒருவர் கூறியதாவது:தமிழகத்தில், சேலத்தை தவிர பிறநகரங்களில் கடந்த வாரமே விலை உயர்த்தப்பட்டு விட்டது.ஓட்டல் தொழிலை காப்பாற்றும் வகையில், வரும்1ம் தேதி முதல் சாப்பாடு, சிற்றுண்டி வகைகளின் விலையை உயர்த்த உள்ளோம் என்றார்.- நமது நிருபர் -

### கிடங்கு வசதி இல்லாததால்ஏழு லட்சம் டன் கோதுமை விற்பனை

ஜூலை 29,2012,05:02



புதுடில்லி:உணவு தானியங்களை சேமித்து வைக்க போதிய கிடங்கு வசதிகள் இல்லாததால், மத்திய அரசு, ஏழுலட்சம் டன் கோதுமையை, வெளிச் சந்தையில் மானிய விலையில் விற்பனை செய்துள்ளது. இந்தியா, கடந்த சில ஆண்டுகளாக, உணவு தானிய உற்பத்தியில் சாதனை படைத்து வருகிறது. ஆனால், கொள்முதல் செய்யப்படும் உணவு தானியங்களை சேமிக்க போதுமான கிடங்கு வசதிகள் இல்லாத நிலை உள்ளது.
முகமை அமைப்புகள்:நாட்டில், 6.40 கோடி டன் உணவு தானியங்களை சேமித்து வைக்கும் அளவிற்கே கிடங்கு வசதி உள்ளது. ஆனால், மத்திய அரசின் முகமை அமைப்புகள், இதை விட அதிகமாக, அதாவது 8.20 டன் உணவு தானியங்களை கொள்முதல் செய்துள்ளன.

அதனால், திறந்தவெளியில் வைக்கப்பட்டுள்ள பல கோடி டன் உணவுதானியங்கள் மழை, புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளால் பாழாகின்றன. இதை தடுக்கும்பொருட்டு, மத்திய அரசு, கோதுமை, பாசுமதி அரிசி, சாதாரண அரிசி ஆகியவற்றின் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்துடன், சென்ற மாதம், மத்திய அமைச்சரவைக் குழு, 30 லட்சம் டன் கோதுமையை, வெளிச்சந்தையில் விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்கியது.

இதன்படி, நடப்பு ஜூலை மாதம், முதற்கட்டமாக 13 லட்சம் டன் கோதுமையை விற்பனைக்கு அனுப்ப மத்திய உணவு அமைச்சகம் ஒப்புதல் அளித்தது. 'இதில் 6.99 லட்சம் டன் கோதுமை விற்பனை செய்யப்பட்டுள்ளது' என, உணவு அமைச்சக

அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ், பஞ்சாப் (1.01 லட்சம் டன்), ஆந்திரா (18,978 டன்),மேற்குவங்கம் (11,563 டன்), சட்டீஸ்கர் (10,823 டன்), அசாம் (10,186 டன்), ராஜஸ்தான் (5,234 டன்) மற்றும் ஜார்கண்ட் (400 டன்) ஆகிய மாநிலங்களுக்கான ஒதுக்கீடு முடிவடைந்து விட்டது.'இந்த மாநிலங்களில் மூன்றாவது மற்றும் நான்காம் கட்ட விற்பனைக்கான ஒப்பந்தபுள்ளிகள் கோரப்படமாட்டாது' என, அந்த அதிகாரி மேலும் கூறினார்.

விற்பனை விலை:மத்திய அரசு, பொது வினியோக திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக, ஒரு குவிண்டால் கோதுமையை 1,822 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறது. ஆனால், கிடங்கு பற்றாக்குறை காரணமாக, தற்போது வெளிச்சந்தையில் ஒரு குவிண்டால் கோதுமையை 1,170 ரூபாய்க்கு விற்பனை செய்கிறது.இது, மானிய விலையில் கொள்முதல் செய்யப்பட்டதை விட குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்.**

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,06:22 IST

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டையில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், தோட்டக்கலைத்துறை சார்பில், துல்லிய பண்ணை விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. ஏத்தாப்பூர் மரவள்ளி ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் செந்தில்குமார் தலைமை வகித்தார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் வரவேற்றார். சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் கவிதா, தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் கதிரவன் ஆகியோர் பேசினர்.துல்லிய பண்ணையத்தில், களை நிர்வாகம், இயந்திரங்கள் பயன்பாடு, தோட்டக்கலை சாகுபடி, மூலிகைப்பயிர் சாகுபடி, தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது. தொடர்ந்து, தோட்டக்கலைதுறை சார்பில், வயலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சொட்டு நீர் பாசனம் பற்றி செயல் விளக்கம்

அளிக்கப்பட்டது.ஓய்வு பெற்ற தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அசோகன், நடவுத்துறை இயக்குனர் மணிவண்ணன், ராசிபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் கிருஷ்ணன், உதவி வேளாண் அலுவலர்கள் சுந்தர்ராஜன், மாணிக்கம், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பேரிக்காய் விற்பனை அமோகம்

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,03:38 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில், பேரிக்காய் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. ஏற்காடு, கொடைக்கானல் மற்றும் ஊட்டி போன் மலை பிரதேசங்களில் இருந்து ஆண்டு தோறும் ஜூலை மாதத்தில் பேரிக்காய் விற்பனைக்கு வரத் தொடங்கும். மக்கள் மத்தியில் வால் பேரிக்காய், மற்றும் பேரிக்காய்க்கு நல்ல வரவேற்பு உள்ளதை அடுத்து கிருஷ்ணகிரியில் உள்ள வியாபாரிகள் பேரிக்காய் விளையும் பகுதிகளுக்கு சென்று மொத்தமாக வாங்கி வந்து, சில்லரை வியாபாரிகள் மற்றும் பழக்கடைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.பேரிக்காய் சீசன் தொடங்கியதை அடுத்து, மொத்த வியாபாரிகளிடம் இருந்து சிறு வியாபாரிகள் தள்ளு வண்டிகள் மூலமும், பழக்கடைக்காரர்கள் கடைகள் மூலம் பேரிக்காய்களை விற்பனை செய்ய தொடங்கியுள்ளனர். தற்போது, வால்பேரிக்காய் ஒரு கிலோ 60 முதல் 80 ரூபாய் வரை பேரிக்காய் ஒரு கிலோ, 30 முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்து வருகின்றனர்.சில மாதங்கள் மட்டுமே விற்பனைக்கு வரும் பேரிக்காய்களை பொதுமக்கள் ஆர்வமாக வாங்கி செல்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மேலும், கடந்தாண்டு ஜூலை மாதத்தில் அதிகளவில் பேரிக்காய் வரத்து இருந்தது என்றும் இந்தாண்டு குறைந்தளவே வரத்து உள்ளதாகவும், விலை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

## பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,06:27 IST

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த நீர் மட்ட உயரம், 120 அடியாகும். இதில், சகதி, 15 அடி போக, மொத்த நீர்ப்பிடிப்பு உயரம், 105 அடியாகும். பவானிசாகர் அணையில், நீர்ப்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில் தொடர்ந்து கடும் வறட்சி நிலவுவதால், அணைக்கு சொற்ப அளவில் தண்ணீர் வருகிறது.அதேநேரம், அணையில் இருந்து பாசனத்துக்காக, திறந்து விடும் அளவு அதிகரிப்பதால், அணையின் நீர் மட்டம்,

குறைந்து, 33 அடியானது.இதனால், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும், பவானிசாகர் அணையில் இருந்து நடவு செய்யப்பட்டு, ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய பயிர்கள், கருகும் அபாயமும் ஏற்பட்டது.
இந்நிலையில், பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம், "நீலகிரி மாவட்டம் பில்லூர் அணையில் இருந்து பவானிசாகர் அணைக்கு, தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுப்பதாக' உறுதியளித்திருந்தார்.நேற்று காலை, 8 மணிக்கு, அணையின் நீர் மட்டம், 32.8 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு, 383 கனஅடி நீர் வந்தது. இதையடுத்து, 9 மணியளவில், அணைக்கு வரும் தண்ணீர் அளவு அதிகரிக்கத்துவங்கி, விநாடிக்கு, 1,033 கனஅடி நீர் வந்தது. மாலை, 7 மணிக்கு அணைக்கு, விநாடிக்கு, 1,311 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து பவானி ஆற்றின் மூலம், தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனப்பகுதிக்கு, 750 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்காலில், 5 கனஅடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டது.""அணையின் நீர் மட்டம், 33.06 அடியாக இருந்தது. தற்போது, தண்ணீர் அதிகரிக்க, பில்லூர் அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் காரணமா" எனக்கேட்டபோது, ""தெரியவில்லை" என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மக்காச்சோளத்தில் அதிக மகசூலுக்கு யோசனை

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,06:27 IST

கோபிசெட்டிபாளையம்: மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெற, வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.
கோதுமைக்கு அடுத்தபடியாக, அதிக புரதச்சத்து அடங்கிய தானியம் மக்காச்சோளம். மனித உணவாகவும், கால்நடைத் தீவனமாகவும் விளங்குகிறது. மானாவாரியில் நல்ல மகசூலை தரவல்லது. மக்காச்சோளம் சாகுபடியில் அதிக விளைச்சல் பெறுவது பற்றி, கோபி வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியுள்ளதாவது:மக்காச்சோளத்தில், கோ.ஹெச்.-1, 2, 3, கோ-1, கோ.பி.ஸி., கங்கா, டெக்கான், பயனியர் ஆகிய வீரிய ஒட்டு ரகங்கள் சிறந்தவை. ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம். ஜனவரி, செப்டம்பர் மாதங்களில் பயிரிட்டால் மகசூல் அதிகம் பெறலாம். பாரம்பரிய ரகங்களுக்கு எட்டு கிலோ விதை, வீரிய ஒட்டு ரகங்களுக்கு ஆறு கிலோ விதை, ஒரு ஏக்கருக்கு தேவை.
ஒரு கிலோ விதைக்கு, இரண்டு கிராம் திரம் அல்லது கார்பென்சிம் கலந்து, 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்க வேண்டும். அடிச்சாம்பல் நோயை கட்டுப்படுத்த மெட்டாலாக்ஸில், தண்டு துளைப்பானை கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் அல்லது இமிடாகுளோபிரிட் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மருந்தின் மூலம் விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். பூஞ்சாண விதை நேர்த்தி

செய்த பின், மூன்று பாக்கெட் அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தை கலந்து, நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.ஏக்கருக்கு ஐந்து டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இட வேண்டும். அதனுடன் நான்கு பொட்டலம் அசோஸ்பைரில்லம், நான்கு பொட்டலம் பாஸ்போபேக்டர் உயிர் உரங்கள் கலந்து, கடைசி உழவில் இட வேண்டும்.இரண்டு அடிக்கு முக்கால் அடி இடைவெளி தேவை. பாரம்பரிய ரகமாக இருந்தால் ஒரு குழிக்கு இரண்டு விதைகள் வீதமும், வீரிய ஒட்டு ரக விதையானால் குழிக்கு ஒரு விதை வீதம் விதைக்க வேண்டும். 20:20 காம்ப்ளக்ஸ், 125 கிலோ, பொட்டாஷ், 32 கிலோ இட வேண்டும்.குருத்து புழுவை கட்டுப்படுத்த, ஏக்கருக்கு குவினால்பாஸ், 400 மில்லி, கார்பரில், 50 சத மருந்து 1 - 20 கிலோ தெளிக்கலாம். கதிரை துளைக்கும் புழுக்களை கட்டுப்படுத்த ஏக்கருக்கு, 10 கிலோ லின்டேன் தூள் அல்லது 10 கிலோ கார்பாரில் தூள் தெளிக்கலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## முதுமலை புலிகள் காப்பகத்தில் நெல் விவசாயம்

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,04:14 IST

கருத்தை பதிவு செய்ய

பந்தலூர்:கூடலூர், பந்தலூர் பகுதிகளின் வயல்கள் வாழை மற்றும் தேயிலை தோட்டங்களாக மாறிவரும் நிலையில், முதுமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட பகுதியில் நெல் விவசாயம் நடந்து வருகிறது.நீலகிரி மாவட்டத்தில், கூடலூர், பந்தலூர் பகுதிகள் கேரளா மாநிலம் வயநாடு மாவட்டத்தை ஒட்டி அமைந்துள்ளதால், இங்கு தேயிலை, காபி விவசாயம் மட்டுமின்றி, ஊடுபயிராக குருமிளகு, இஞ்சி, மஞ்சள் உள்ளிட்ட மலைபயிர்கள் பயிரிடப்படுகிறது. சில வயல்வெளிகளில் நெல் விவசாயமும் மேற்கொள்ளப்பட்டது. காலநிலை மாற்றம்; உழவு தொழிலுக்கு தேவையான தொழிலாளர்கள் பற்றாக்குறை போன்றவற்றால், நெல் விவசாயம் குறைந்து, நேந்திரன் வாழை, தேயிலை விவசாயத்துக்கு வயல் வெளிகள் மாறி வருகின்றன.அதேவேளையில், ஒரு சில இடங்களில் மவுன்டாடன் செட்டி மற்றும் வயநாடன் செட்டி சமுதாயத்தை சேர்ந்த சில குடும்பங்கள் நெல் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆதிகாலத்தில் சேற்றுவாளி, கரிவாளி, மரநெல், கோதண்டம், பெரும்பாலா, கந்தகசாலை, சம்பா ஆகிய நெல் ரகங்கள் பயிரிடப்பட்டன.இதில், சேற்றுவாளி, கரிவாளி ஆகியவை கோடை காலத்தில் விதைக்கப்படும். பிற ரகங்கள் மழை காலங்களில் நாற்றுகளாக வளர்க்கப்பட்டு, நடவு செய்யப்படும். ஆனால், தற்போது "ஐ.ஆர்.20, ஐ.ஆர்.50, பாரதி' ஆகிய நெல் ரகங்கள் பயிரிடப்படுகிறது.

நடப்பு ஆண்டில் பருவமழை பொய்த்துபோன நிலையில், முதுமலை காப்பகத்திற்கு உட்பட்ட கல்லடி பகுதியில், இயற்கையாக நீர் வரத்து உள்ளதால், இங்குள்ள வயல்வெளிகளை நெல் விவசாயத்திற்கு ஏற்ற வகையில் தயார்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.இவர்கள்

உற்பத்தி செய்யும் நெல், விற்பனைக்கு இல்லாவிட்டாலும், தங்களின் ஓராண்டு தேவைக்கு நெல் விவசாயம் செய்து வருகின்றனர். மவுன்டாடன் செட்டி சமுதாய தலைவர் கிருஷ்ணன் கூறுகையில்,""ஆதி காலங்களில் சேற்றுவாளி, கரிவாளி ஆகிய ரகங்களிலிருந்து கிடைக்கும் நெல்லை உரலில் குத்துவதால் உமி அதிகம் வெளியேறாமல் இருக்கும். இந்தவகை அரிசியை உட்கொண்டால் சர்க்கரை உள்ளிட்ட எந்த நோய்களும் ஏற்படாது. ஆனால், தற்போது பல்வேறு காரணங்களால் நெல் விவசாயம் குறைந்து, ரேஷனில் இலவசமாக கிடைக்கும் அரிசியை வாங்க மக்கள் பழகி விட்டனர். இதனால், விவசாயிகளும் தங்களின் பாரம்பரிய தொழிலை விட்ட விலகி வருகின்றனர். நெல் விவசாயத்தில் ஆர்வம் காட்டுவதில்லை. இந்த சூழ்நிலையில், எங்கள் சமுதாயத்தில் ஓரளவு நெல் விவசாயம் தற்போதும் நடந்து வருவது மகிழ்ச்சியை அளிக்கிறது," என்றார்.

### மரக்கன்று நடும் விழா

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,03:22 IST

வேலாயுதம்பாளையம்: பசுமை தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா புகளூர் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் பசுமை தாயகம் மாவட்ட தலைவர் சுரேஷ் தலைமையில் நடந்தது.
விழாவில் தலைமை ஆசிரியர் வெங்கடாசலம் மரக் கன்றுகளை பள்ளி வளாகத்தில் நட்டார். நிகழ்ச்சியில் பசுமை தாயகம் நிர்வாகிகள் டாக்டர் மணி, திவேல், குணசேகரன், நட ராஜன், ரவி, அறிவழகன், நடராஜன், லோகு, துணை தலைமை யாசிரியர் ஆசிரியர் மாணிக்கம் உள்பட பலர் பங்கேற்றனர்.

### தோட்டக்கலை திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

பதிவு செய்த நாள் : ஜூலை 29,2012,23:00 IST

தேனி:மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களுக்கும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தகுதியுள்ள விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் தெரிவித்துள்ளார்.அவர் கூறியதாவது: தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்திற்கு 2 கோடியே 19 லட்சம் ரூபாய், தேசிய நுண்ணீர் பாசன இயக்க திட்டத்தின் கீழ் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர் தொழில்நுட்ப காய்கறி பெருக்கு திட்டத்தின் கீழ் 9 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய், துல்லிய பண்ணைய திட்டத்தின் கீழ் ஒரு

கோடியே 28 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வெங்காயம், வெற்றிலை உயர் தொழில்நுட்ப திட்டத்தின் கீழ் 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், மானாவாரி தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் 75 லட்சம் ரூபாய், பந்தல் காய்கறி அபிவிருத்தி திட்டத்தில் 62 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் அரசு நிதி ஒதுக்கீடு வழங்கி உள்ளது. இந்த ஒதுக்கீடு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பின்னர், தேவைப்பட்டால் கூடுதல் ஒதுக்கீடு பெற்றுக் கொள்ள முடியும்.எனவே தகுதி உள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம், இவ்வாறு கூறினார்.

---

தினகரன்

விவசாயிகளுக்கு 100% மானியத்தில் சொட்டு நீர்ப்பாசன வசதி

பதிவு செய்த நேரம்:2012-07-30 09:56:53

கோபி, : கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து தரப்படும் என கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

சமீப காலமாக பருவமழை பொய்த்து வருவதை தொ டர்ந்து குறைந்த தண்ணீரில் அதிக மகசூல் பெறுவதற்கு வேளாண்துறை மூலம் துல்லிய பண்ணை பாசனம், தெளிப்பு நீர் பாசனம், சொட்டு நீர் பாசனம், உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின்படி 5ஏக்கர் குறைவாக நிலம் உள்ள விவசாயிகளுக்கு 100சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்துத் தரப்படுகிறது. 1.5 ஏக்கர் வரை அதிகபட்சமாக ரூ.43ஆயிரத்து 816 முழு மானியமாக வழங்கப்படும். சொட்டு நீர் அமைக்கும் விவசாயிகளுக்கு நீரில் கரையும் உரங்கள் வேளாண்மை துறை மூலம் இலவசமாக வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் தேவைப்படும் சிறு மற்றும் குறு விவசாயிகள் கோபியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்தார்.

---